ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2024.12.20 |

# மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி (மா.மொ.உ.உ)[1] - 2023

## மேல் மாகாணம் அதன் பங்கில் சிறிதளவு சரிவொன்றை எதிர்நோக்கிய போதிலும் முன்னிலைவகித்து பொருளாதார நிலையைத் தக்கவைத்துக்கொண்டது.

**முக்கிய அம்சங்கள்**


*பெயரளவிலான மொ.உ.உற்பத்தி – 2023*
*ரூ.27, 630 பில்.*

*மா.மொ.உ.உற்பத்தி பங்குகள்:*
*1ஆவது* மேல் மாகாணம் **43.7%**
*2ஆவது* வட மேல் மாகாணம் **10.9%**
*3ஆவது* மத்திய மாகாணம் **10.3%**

மேல் மாகாணம் 2023ஆம் ஆண்டில், இலங்கையின் பெயரளவு மொ.உ.உற்பத்தியின் பாரிய பங்கிற்கு (43.7) வகைக்கூறிய போதிலும் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதன் பங்களிப்பில் சிறிதளவிலான சரிவொன்றை எடுத்துக்காட்டியது. மேல் மாகாணத்தின் வலிமையான பிரசன்னம் குறிப்பாக கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளில் காணக்கூடியதாகவுள்ளது. அதேவேளை, வடமேல் (10.9 சதவீதம்) மற்றும் மத்திய (10.3 சதவீதம்) மாகாணங்கள் நெருக்கிய போட்டியாளர்களாக விளங்கி, முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளைப் பெற்றுக்கொண்டன.

மத்திய, வட மத்திய, வட மற்றும் தென் மாகாணங்களின் பங்குகள் 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டில் அதிகரித்தன. மேலும், அனைத்து மாகாணங்களினதும் பெயரளவு மொ.உ.உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகத்தில் இருந்தபோதிலும், 2023ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்தது.

வரைபடம் 1
மொ.உ.உற்பத்தியின் மாகாணப் பங்குகள் - 2023





### பொருளாதார நடவடிக்கைகளுக்கான மாகாண ரீதியான பங்களிப்பு[2]

தென் (13.5 சதவீதம்) மற்றும் மத்திய (12.4 சதவீதம்) மாகாணங்களைத் தொடர்ந்து, 2023ஆம் ஆண்டில் வட மேல் மாகாணம் 19.6 சதவீதம் கொண்ட பங்கொன்றை வழங்கி வேளாண்மை நடவடிக்கைகளில் தொடர்ந்தும் முன்னிலை வகித்தது.

அதேவேளை மேல் மாகாணம் (48.7 சதவீதம்) 2023ஆம் ஆண்டில் கைத்தொழில் நடவடிக்கைகளில் அதன் வலுவான பிரசன்னத்தை நிலைநிறுத்தி, ஏறத்தாழ ஒட்டுமொத்த கைத்தொழிலின் அரைவாசிப் பெறுமதிக்கு வகைகூறியது. வடமேல் (12.3 சதவீதம்) மற்றும் மத்திய மாகாணங்கள் (9.3 சதவீதம்) மொத்த கைத்தொழில் நடவடிக்கைகளுக்கான அடுத்த முக்கிய பங்காளர்களாக காணப்பட்டன.

அடுத்த உயர்ந்தளவான பங்காளர்களாக மத்திய மாகாணம் 10.4 சதவீதத்தையும் தென் மாகாணம் 9.9 சதவீதத்தையும் பங்களித்ததைத் தொடர்ந்து, மேல் மாகாணம் பணிகள் நடவடிக்கைகளில் 45.9 சதவீதம் கொண்ட பாரிய பங்கிற்கு வகைகூறியது.

வரைபடம் 2
மாகாணங்களின் நடவடிக்கை ரீதியான பங்களிப்பு (%) - 2023




[1] மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியானது 2015 அடிப்படை ஆண்டின் கீழ் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியினை கூறுகளாக வேறுபடுத்துவதன் மூலம் மேலிருந்து கீழ் அணுகுமுறையொன்றினைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டு வருகின்றது. மாகாணங்களுக்கான மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியினை மதிப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியில் ஒவ்வொரு துறை விடயத்தினதும் பெறுமதியானது மாகாண மட்டத்தில் தொடர்புடைய குறிகாட்டிகளைப் பயன்படுத்தி பங்கீடு செய்யப்பட்டது.

[2] 2021 மற்றும் 2022 மாகாண ரீதியான மற்றும் துறைசார் ஒப்பீடுகள் இவ்வெளியீட்டின் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 1**
**நடைமுறை சந்தை விலைகளில் மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தி (அடிப்படை ஆண்டு 2015)**

| மாகாணம் | 2022[அ] | | 2023[ஆ] | |
|---|---|---|---|---|
| | பெறுமதி (ரூ.மில்.) | பங்கு (%) | பெறுமதி (ரூ.மில்.) | பங்கு (%) |
| மத்திய | 2,414,274 | 10.0 | 2,844,197 | 10.3 |
| கிழக்கு | 1,225,527 | 5.1 | 1,298,136 | 4.7 |
| வட மத்திய | 1,151,135 | 4.8 | 1,329,760 | 4.8 |
| வட மேல் | 2,672,598 | 11.1 | 3,016,741 | 10.9 |
| வடக்கு | 974,521 | 4.0 | 1,245,665 | 4.5 |
| சபரகமுவ | 1,722,635 | 7.2 | 1,939,907 | 7.0 |
| தென் | 2,176,034 | 9.0 | 2,580,739 | 9.3 |
| ஊவா | 1,161,566 | 4.8 | 1,300,538 | 4.7 |
| மேல் | 10,565,473 | 43.9 | 12,073,982 | 43.7 |
| **இலங்கை** | **24,063,762** | **100.0** | **27,629,665** | **100.0** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**அட்டவணை 2**
**நடைமுறை சந்தை விலைகளில் மாகாண மூலமான மொத்த பெறுமதி சேர்த்தலின் துறைவாரியான உள்ளமைப்பு**

| மாகாணம் | வேளாண்மை (%) | | கைத்தொழில் (%) | | பணிகள் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2022[அ] | 2023[ஆ] | 2022[அ] | 2023[ஆ] | 2022[அ] | 2023[ஆ] |
| மத்திய | 14.5 | 12.4 | 8.7 | 9.3 | 10.1 | 10.4 |
| கிழக்கு | 9.5 | 9.4 | 4.3 | 3.5 | 4.8 | 4.6 |
| வட மத்திய | 7.6 | 8.4 | 4.2 | 3.7 | 4.7 | 4.8 |
| வட மேல் | 18.5 | 19.6 | 11.6 | 12.3 | 9.8 | 9.1 |
| வடக்கு | 6.1 | 8.4 | 4.3 | 4.8 | 3.6 | 3.9 |
| சபரகமுவ | 8.8 | 7.7 | 6.7 | 7.3 | 7.1 | 6.8 |
| தென் | 14.5 | 13.5 | 6.3 | 6.7 | 9.6 | 9.9 |
| ஊவா | 8.8 | 8.5 | 4.0 | 3.6 | 4.7 | 4.6 |
| மேல் | 11.7 | 12.1 | 49.9 | 48.7 | 45.6 | 45.9 |
| **இலங்கை** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**அட்டவணை 3**
**நடைமுறை சந்தை விலைகளில் துறைவாரியான மொத்த பெறுமதி சேர்த்தலின் மாகாண உள்ளமைப்பு**

| மாகாணம் | 2022[அ] | | | | 2023[ஆ] | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வேளாண்மை (%) | கைத்தொழில் (%) | பணிகள் (%) | மொத்த பெறுமதி கூட்டல் (%) | வேளாண்மை (%) | கைத்தொழில் (%) | பணிகள் (%) | மொத்த பெறுமதி கூட்டல் (%) |
| மத்திய | 12.9 | 27.2 | 59.9 | 100.0 | 10.7 | 24.7 | 64.6 | 100.0 |
| கிழக்கு | 16.6 | 26.5 | 56.9 | 100.0 | 17.7 | 20.2 | 62.2 | 100.0 |
| வட மத்திய | 14.1 | 27.2 | 58.7 | 100.0 | 15.4 | 21.1 | 63.5 | 100.0 |
| வட மேல் | 14.9 | 32.6 | 52.5 | 100.0 | 15.9 | 30.9 | 53.3 | 100.0 |
| வடக்கு | 13.4 | 33.0 | 53.7 | 100.0 | 16.4 | 29.0 | 54.7 | 100.0 |
| சபரகமுவ | 10.9 | 29.4 | 59.7 | 100.0 | 9.7 | 28.3 | 62.1 | 100.0 |
| தென் | 14.3 | 21.9 | 63.8 | 100.0 | 12.8 | 19.6 | 67.6 | 100.0 |
| ஊவா | 16.3 | 25.7 | 57.9 | 100.0 | 16.0 | 21.0 | 63.0 | 100.0 |
| மேல் | 2.4 | 35.6 | 62.1 | 100.0 | 2.4 | 30.4 | 67.1 | 100.0 |
| **இலங்கை** | **8.9** | **31.3** | **59.8** | **100.0** | **8.8** | **27.3** | **63.9** | **100.0** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்